ஆதாரங்களை வைத்து உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அந்த ஏரியை மேம்படுத்த ஏற்பாடு செய்யப்படும், அந்த ஏரியினுடைய கொள்ளளவை மேம்படுத்த ஏற்பாடு செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ஏரியை பராமரிப்புச் செய்யும்படி ஆணையிட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

(ஆ) சங்கராபுரம் தொகுதி கல்ராயன் மலைப் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் மின் விளக்குகள் எரியாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. இராமசுவாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இராமசுவாமி.

* திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, கல்ராயன் மலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் மின்விளக்குகள் எரியாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி கல்ராயன் மலைப் பகுதியில் வெள்ளிமலை, கரியாலூர், சேராப்பட்டு, இந்நாடு மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் 850 தெரு குழல் விளக்குகள் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும் எரியாமல் இருந்தன. 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 600 பூரற்றுக் குழல் விளக்குகள் வாங்கிப் பொருத்தி அவைகள் எரியச் செய்யப்

பட்டன. மீதம் உள்ள 250 குழல் விளக்குகளை எரியச் செய்ய கல்ராயன் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் நடவடிக்கை எடுத்துள்ளார். இன்னும் ஒரு வாரத்தில் மீதமுள்ள 250 மின் குழல் விளக்குகளும் எரியச் செய்யப்பட்டுவிடும்.

மேற்படி கிராமங்களில் தெரு விளக்குகள் பரவலாக எரியச் செய்துள்ளபடியால் மிருகங்கள் மற்றும் பாம்புகள் தொல்லை நீக்கப்பட்டு, மக்கள் அச்சமின்றியும், பதட்டமின்றியும் நடமாட தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத் தொல்லைகள் ஏதும் தற்போது இருப்பதாகத் தகவல்கள் இல்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி கல்ராயன் மலைப் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்கள் வெள்ளிமலை, கரியாலூர், சேராப்பட்டு, இந்நாடு, கிளாகாடு, குண்டியாநத்தம் ஆகிய ஊர்களில் போடப்பட்ட சோலார் மின் விளக்குகள்-முந்தைய தி.மு.க. அரசில் போடப்பட்ட மின் விளக்குகள் முற்றிலும் எரியவில்லை. பேட்டரி பொங்கி விட்டதாகவும் அதை புதிதாக போட்டால்தான் எரியும் என்று கூறுகிறார்கள். அங்கு வாழும் மக்கள் கொடிய மிருகங்கள்—காடி, புலி போன்ற மிருகங்களின் நடமாட்டத்தினால் இரவில் வெளியே வர அச்சப்படுகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சரின் அறிக்கையில் மேற்படி சோலார் பல்புகள் பற்றிய விவரம் எதுவும் இல்லை. 250 குழல் பல்புகள் மட்டும் இன்னும் ஒரு வாரத்தில் போடுவதாகக் கூறி உள்ளார்கள். எனவே அந்த ஊர்களை நானே நேரடியாகப் போய் பார்த்தேன். 30 கிராமங்களில் சோலார் பல்புகள் போடப்பட்டுள்ளன. ஆனால் ஒன்றும் எரியவில்லை. எனவே இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேணுமாயும் விபரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அங்குள்ள விளக்குகள் எரியவில்லை என்ற விவரத்தை அறிந்து, அங்கு

மாற்று ஏற்பாடாக 850 குழல் விளக்குகள் ஏற்பாடு செய்து 31—8—1991-ல் உள்ள நிலவரத்தின்படி 605 குழல் விளக்குகள் எரிந்துகொண்டு இருக்கிறது. 27—9—1991 இல் பொருத்தப் பட்டவிளக்குகள் 120. இன்னும் ஒரு வார காலத்திற்குள்ளாக 125 விளக்குகள் பொருத்தப்பட்டு, அந்த மக்களுடைய துயர் துடைக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குண்டியாநத்தம் கிராமப் பகுதியில் அமைச்சர் அவர்கள் அறிக்கையில் கூறியதுபோல் இந்த மாதிரி விளக்குகள் ஏதுவும் போடப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியில் எந்த குறையும் இல்லை. முந்தைய அரசின் தவறால் மலைவாழ் மக்கள் மின்விளக்குகள் இல்லாமல் கல்ராயன் மலையில் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். எனவே அதைப்பற்றிய விபரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தென் ஆற்காடு மாவட்டத்தில் நேர் செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வர வழைத்து, நேரில் பேசிவிட்டு வந்துதான் இன்று இந்த விவரங் களைத் தெரிவிக்கிறேன். அதிகாரிகள் தரக்கூடிய அறிக்கைகள் தவறுதலாக நிச்சயமாக இருக்க முடியாது. நான் நேரிலே செல்ல வேண்டுமென்று இருந்தேன். நேரம் இல்லாத காரணத் தால், அவர்களை வரவழைத்து விவரங்களைக் கேட்டேன். இப்போது நான் தருகிற குறிப்புகள் அனைத்தும் உண்மை என்று கூறுகிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி எ. எஸ். பொன் னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.